## சட்டமன்றத் தேர்தல் :

# 14 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!






சென்னை, மார்ச் 6 –

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

14 வது நாளாக நேற்று (5.3.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சு வார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

14வது நாளான நேற்று (05.03.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை கழக இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன் பெற்று கொண்டார். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக திரண்டு வந்து விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் இன்று (மார்ச் 6ஆம் தேதி) வரை நடை பெறுகிறது.

---

### கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, நகரம் –

## ஒன்றியக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம்!

### செயலாளர் டாக்டர். அ. சுபேர் கான் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, மார்ச் 6 –

சிறுபான்மையின மக்களின் பாதுகாவலர் கழகத் தலைவர்; முதல்வர் அவர்களின் நல் வழிகாட்டுதலின்படியும், கழக இளைஞரணிச் செயலாளர்; தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களின் ஆலோசனையின்படியும், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில, மாவட்ட, மாநகர,பகுதி, நகரம் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் காணொலி காட்சி வாயிலாக மாநிலச் செயலாளர் டாக்டர். அ. சுபேர் கான், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதலாவதாக, மறைந்த சுதந்திரப் போராட்ட தியாகியும், கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான நல்லக்கண்ணு அய்யா அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கடந்த மாதம் நடைபெற்ற மாநாட்டில் வக்பு வாரியத்தில் பதிவுபெற்ற உலமாக்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் மதிப்பூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியமாக ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு வழங்கப்படும் என அறிவித்த முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன்,

உலமாக்கள் இருசக்கர வாகனம் வாங்க ரூபாய் ஐம்பதாயிரம் தமிழ்நாடு அரசு மானியம், அரசு உருது பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடம் நிரப்பப்படும், கல்லறை மற்றும் கபரஸ்தான் இல்லாத அனைத்து மாவட்டம் மற்றும் மாநகராட்சி களிலும் அரசு சார்பில் கல்லறை மற்றும் கபரஸ்தான் அமைக்கப்படும், சென்னை மற்றும் மதுரையைத் தொடர்ந்து கோவையிலும் வக்ப் தீர்ப்பாயம் அமைக்கப்படும்

என பல்வேறு அறிவிப்புகளை வழங்கிய முதல்வர் அவர்களுக்கு அனைத்து சிறுபான்மையின மக்களின் சார்பாகவும் நன்றி தெரிவிக்கப்பட்டது. வருகிற 9 ஆம் தேதியன்று திருச்சியில் நடைபெறவுள்ள கழக நிர்வாகிகள் சந்திப்பில் பெரும் திரளாக கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் அணி திரள்வதும், மேலும் நடைபெறவுள்ள தேர்தலில் கழகம் ஏழாவது முறையாக வென்று கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை இரண்டாவது முறையாக மீண்டும் முதல்வர் அரியணை ஏற கழக சிறு பான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் அயராது உழைத்திடவும்,

ஒன்று கூடுவோம் வென்று காட்டுவோம்! வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு! ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்! உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

### வேலூர் மாநகர தி.மு.க. சார்பில் ரம்ஜான் கொண்டாடிடும்

## முஸ்லிம் மக்களுக்கு பிரியாணி செய்ய நலத்திட்ட உதவிகள்!

### கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

வேலூர், மார்ச் 6 -

வேலூர் மாநகர தி.மு.க. சார்பில் ரம்ஜான் கொண்டாடிடும் வகையில் 7073 முஸ்லிம் மக்களுக்கு பிரியாணி செய்ய நலத்திட்ட உதவிகளை ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. வழங்கினார்.

வரும் 21ந்தேதி(சனிக்கிழமை) ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு முஸ்லிம் மக்களுக்கு பிரியாணி செய்ய நலத்திட்ட உதவிகள் 7073 பேருக்கு நேற்று காலை 10 மணிக்கு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம். கதிர்ஆனந்த் எம்.பி., மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், முன்னாள் அமைச்சர் டாக்டர் வி. எஸ்.விஜய், கொள்கை பரப்புதுணை செயலாளர் கதிரேசன், பகுதி செயலாளர்கள் ஆர்.பி.இ. சசிகுமார்,எம்.ஏ.

கணேஷ்சங்கர், வி.ஜி. கே.சுந்தரவிஜி,கா.சு.சண்முகம், மண்டல குழு தலைவர்கள் வீனஸ் ஆர்.நரேந்திரன், யூசுப் கான்,மாமன்ற உறுப்பினர்கள் வி.எஸ். முருகன், தபசும் பர்வீன் சக்கரவர்த்தி,ஜெய்சங்கர், தயாள்ராஜ், பாலமுரளி கிருஷ்ணன் , முருகப்பெருமாள், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே. ஆர்.அசோக், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.எம்.பாலாஜி, மாணவர் அணி துணை அமைப்பாளர் அருண், துபாய் சீனு, இலக்கிய அணி ஏ.துரைஅரசன், மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி ஏ.கே. கோபிநாத் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தேனி தெற்கு மாவட்டம் கம்பம் கட்சி அலுவலகத்தில் கட்சி நிர்வாகிகளை முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்தார். உடன் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன், கம்பம் தொகுதி பார்வையாளர் ஜெயன், மாவட்ட அவைத் தலைவர் மனோகரன், மாவட்ட துணை செயலாளர் வேப்பம்பட்டி செந்தில், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை முருகேசன், தங்கப்பாண்டி, ராஜாராம், குமரன், நகர செயலாளர்கள் பால்பாண்டி ராஜா, வீரபாண்டி, லோகந்துறை முத்துக்குமார் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

---

### ‘ஒருங்கிணைந்த நில ஆவணம்’ –

## பட்டா மாறுதல் விவரங்களின் அறிக்கை - இணையவழி சேவை!

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்!

சென்னை, மார்ச். 6 -

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் இயங்கிவரும் நில அளவை மற்றும் நிலவரித்திட்டத் துறையால் இணையவழி ஆவணங்களான ‘அ’ - பதிவேடு , சிட்டா மற்றும் புலப்படம் ஆகியவை இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த ஆவணங்களின் விவரங்களை ஒருங்கிணைத்து, நில உரிமை தாரர்களுக்கு ‘ஒருங்கிணைந்த நில ஆவணம்’ (Integrated Land Record) என்ற சேவையையும், இணையவழியில் ஒரு புல எண்ணில் நடைபெறும் பட்டா மாறுதல் விவரங்களை பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் ‘பட்டா மாறுதல் விவரங்களின் அறிக்கை’ (History of Patta Transfer) என்ற சேவையையும் நேற்று முன்தினம் (04.03.2026) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்கள் சென்னை, சேப்பாக்கம் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகத்தில் தொடங்கி வைத்தார்.



இச்சேவைகளின் விவரம் பின்வருமாறு:-

**ஒருங்கிணைந்த நில ஆவணம் (Integrated Land Record):** நில உரிமையாளர்கள் தங்களது நிலம் தொடர்பான ஆவணங்களை வங்கிகள் மற்றும் இதர அலுவலகங்களில் சமர்பிக்கும் பொருட்டு, https://eservices.tn.gov.in/eservicesnew/home.html என்ற இணையதளத்தில் அவற்றை தனித்தனியாக பதிவிறக்கம் செய்து வழங்கும் நிலை இருந்து வந்தது. இந்நிலையில் இந்த மூன்று ஆவணங்களையும் ஒருங்கிணைத்து ஒரே ஆவணமாக வழங்கும் பொருட்டு, கடந்த 2021 - 2022 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் படி நில உரிமைதாரர்களுக்கு ஒருங்கிணைந்த நில ஆவணம் என்ற புதிய ஆவணம் வழங்கிட G.O.(Ms.) No. 613 Revenue and Disaster Management Department நாள்: 01.10.2021 அரசாணை வெளியிடப்பட்டு, தேசிய தகவலியல் மையத்தால் இந்த ஆவணம் வடிவமைக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கு இன்று துவக்கி வைக்கப்படுகிறது. நில உரிமை தாரர்கள் தங்களது நிலம் சார்ந்த மாவட்டம், வட்டம், கிராமம், புல எண், உட்பிரிவு எண் ஆகிய விவரங்களை உள்ளீடு செய்து https://eservices.tn.gov.in/eservicesnew/home.html என்ற இணையதளத்தில் பார்வையிட்டு பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**பட்டா மாறுதல் விவரங்களின் அறிக்கை (History of Patta Transfer) :** நில ஆவணங்கள் அனைத்தும் தமிழ்நிலம் மென்பொருள் மூலமாக கணினிபடுத்தப்பட்டு, 2014-ம் ஆண்டு முதல் 2016-ம் ஆண்டு வரையில் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது, இம்மென்பொருள் மூலமாகவே நிலம் தொடர்பான பட்டா மாறுதல் இணையவழியில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒரு குறிப்பிட்ட புல எண்ணில் நடைபெறும் பட்டா மாறுதல் விவரங்களை பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் ஒரு ஆவணம் உருவாக்க முடிவு செய்யப்பட்டு, கடந்த 2024 - 2025 ஆண்டு கூட்டத் தொடரில் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, ‘பதிவுத்துறையில் வழங்கப்படும் வில்லங்கச் சான்றிதழில், பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் விவரங்கள் குறிப்பிடுவது போல, 2016-ம் ஆண்டு முதல் குறிப்பிட்ட கால வரையரைக்குள் தனியார் நிலங்கள் தொடர்பாக நில ஆவணங்களில் இணைய வழியில் மேற்கொள்ளப்பட்ட பட்டா மாற்றங்களின் விவரங்கள் அடங்கிய அறிக்கையினை பொது மக்களுக்கு இணையம் வழியே ஆவணமாக வழங்கும் பொருட்டு அரசால் G.O.(Ms). No. 309 Revenue and Disaster Management [Survey and Settlement II(2)] Department, dated: 16.08.2024 மற்றும் G.O (Ms). No. 415 Revenue and Disaster Management Department [Survey and Settlement II(2)] Department] Dated: 14.10.2024 ஆகிய அரசாணைகள் வெளியிடப்பட்டு, தேசிய தகவல் மையம் மூலமாக இந்த ஆவணம் வடிவமைக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கு இந்சேவை துவக்கி வைக்கப்படுகிறது.

நில உரிமையாளர்கள் https://eservices.tn.gov.in/eservicesnew/home.html என்ற இணையதளத்தில் https://tamilnilam.tn.gov.in/citizen என்ற தலைப்பினை தேர்வு செய்து தங்களது நிலம் சார்ந்த விவரங்களான மாவட்டம், வட்டம், கிராமம், புல எண், உட்பிரிவு எண் மற்றும் விவரம் தேவைப்படும் தேதியினை தேர்வு செய்ய வேண்டும். பின்னர், பட்டா மாற்ற விவரக் கட்டணமான ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50/- வீதம் மற்றும் செயலாக்க கட்டணமாக ரூ. 60/- ஆகியவற்றை இணையம் வாயிலாக இத்தொகையினை செலுத்தி விண்ணப்பம் செய்தவுடன், ‘முந்தைய பட்டா மாறுதல் விவர அறிக்கை’ நில உரிமைதாரரின் ‘Citizen Portal’ கணக்கில் பதிவிறக்கம் செய்யப்பட்டு இருக்கும். இதனை நில உரிமையாளர்கள் பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.




கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் 4.3.2026 அன்று சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தேர்வுநிலை பேரூராட்சி பகுதியில் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார். உடன் திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலாராணி, துணை தலைவர் கான் முகமது, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் உள்ளனர்.